**தலைப்பு 17 - பாராளுமன்ற முதல்வரின் அலுவலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன பாராளுமன்ற முதல்வரின் அலுவலகத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிப்பொறுப்பு தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வில் நோக்கெல்லை

---

தலைப்பு 17 - பாராளுமன்றத்தின் முதல்வரின் அலுவலகத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஆகஸ்ட் 14 ஆந் திகதி அலுவலகத்தின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக பாராளுமன்றத்தின் முதல்வரின் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.5 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அதன் ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| நிதிப்பிரமாணம் | | | |
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதி நடவடிக்கைகளும் திட்டமிடப்பட வேண்டும். (திணைக்களத்தின் பணிகள் நிதி மற்றும் திணைக்களங்களின் கட்டளைகளுக்கு இணங்க மாத்திரம் மேற்கொள்ளப்படாது, அரச பணிகளை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்படும் நேர்மை தொடர்பில் உயர் பெறுமதிகளுக்கு இணங்குவதாக) | 1. பெறுகை நடவடிக்கைகளை போதியளவில் திட்டமிடப்படாமை | 2.1.1 |
| | | 2. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை. | 2.4 |
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கும் ஏற்பாடுகள் தயாரிக்கும் தாப்பிக்கும் முறையொன்று தயாரித்துக் கொள்ளப்படல் வேண்டும். | இணங்காமைகள் | 2.5 |

| | | | |
|---|---|---|---|
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு மற்றும் செலவினத்திற்கு இடையே உள்ள கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு அமைச்சினால் நுட்பமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும் | மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை. | 2.2 |
| 127(6) | கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்பின் பேரில் காணப்பட்ட வருமானம் அல்லது அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டணங்கள் சேகரிக்கும் செயற்பாடுகளை உரிய கவனத்துடன் செயற்பட்டு அமைச்சின் பரிசோதனைகளுக்கு உட்படுத்துதல் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் குறிப்பிடப்பட்டிருந்த குறைபாடுகள் | 2.3 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவம்வாய்ந்த கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

2017 சனவரி 01 அந் திகதி முதல் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 32 சட்ட வரைபுகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், முன்மொழிவுகள், தீர்மானங்கள் மற்றும் 127 கட்டளைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. வருடாந்த அறிக்கைகள், செயலாற்றல் அறிக்கைகள் மற்றும் ஏனைய 380 அறிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 2.1.1 பெறுகை செயன்முன்னேற்றம்

அலுவலகத்திற்காக மீளாய்வாண்டின் போது பெறுகை நடைமுறையினூடாக வழங்கல் மற்றும் சேவைகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 900,000 தொகையான நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 894,933 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடு தொடர்பில் தயாரிக்க வேண்டிய பெறுகைகள் திட்டம் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

**(அ) பிரதான பெறுகைகள் திட்டம்**

அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 வழிகாட்டிக்கமைய 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகள் உள்ளடக்கப்பட்ட பிரதான பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வருடாந்த உத்தேச பெறுகைகள் திட்டம்**

அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கேவையின் 4.2.1 வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கமைய வருடாந்த உத்தேச பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.2 மற்றும் 4.2.3 ஆகிய வழிகாட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் மற்றும் பெறுகைகள் செயல்வழிக் கோவையில் அதற்குரிய மாதிரிக்கமைய பெறுகைகள் திட்டத்தினூடாக எதிர்பார்க்கப்பட்ட பெறுகை செயற்பாடுகளுக்காக பெறுகைகள் கால

அட்டவணையொன்று தயாரிக்கப்பட வேண்டியதுடன், ஒவ்வொரு பெறுகை பணிகளையும் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட கால அட்டவணை குறிப்பாக இனங்காணப்படாது பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஈ) வருடாந்த மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டிற்கமைய பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டினுள் எழுதுகருவிகள் மற்றும் அலுவலக தேவைப்பாடுகளுக்காக ரூபா 500,000 தொகையான மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு அந்த திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.4.2(அ), 5.3.10(அ) மற்றும் 6.3.1(ஆ) ஆகிய வழிகாட்டிகளுக்கமைய ரூபா 794,959 கூட்டுத்தொகையான பெறுகைகள் தொடர்பில் பொருட்களின் விபரங்கள், அளவு, கையளித்த நேரம், இடம், உத்தராவாதம், செல்லுபடியான விலைக்கேள்விகளை முன்வைக்க வேண்டிய கால எல்லை மற்றும் அனைத்து வினாக்கேள்விகளும் முத்திரையிடப்பட்ட உறையொன்றில் சமர்பிக்க வேண்டியமை ஆகிய விடயங்கள், வழங்குனருக்கு அனுப்பப்பட்டிருந்த விலைக்கேள்வி கோரல் ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 6.3.3 மற்றும் 6.3.6 ஆகிய வழிகாட்டிகளுக்கமைய கேள்வி திறத்தல் மற்றும் மதிப்பாய்வுக் குழுக்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.3.1(அ) வழிகாட்டிக்கமைய பதிவுத் தபாலில் அல்லது பெறுகை நிறுவனத்தினால் அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரால் தனிப்பட்ட ரீதியில் கையேற்பதற்கு அல்லது முத்திரையிடப்பட்ட கேள்விப் பெட்டிக்கு இடுவதன் மூலம் விலைக்கேள்விகள் கையேற்கப்பட வேண்டிய போதிலும் அதற்கமைய விலைக்கேள்வி கையேற்கப்பட்டிருக்கவில்லை.

(எ) பெறுகைகள் கையேட்டின் 7.11.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் பயன்படுத்தப்படும் மாதிரிக்கமைய, விலைக்கேள்வி மதிப்பீடு செய்யும் நடைமுறை நிறைவேற்றப்பட்டவுடன் உடனடியாக விலைக்கேள்வி மதிப்பீட்டு அறிக்கைகள் பெறுகைகள் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

## 2.2 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலப்பகுதியினுள் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **2013** | மீண்டுவருபவை | 24.73 | 24.13 | 0.59 | 2.39 |
| | மூலதனம் | 1.30 | 1.26 | 0.04 | 3.08 |
| | **மொத்தம்** | **26.03** | **25.39** | **0.64** | **2.46** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **2014** | மீண்டுவருபவை | 26.68 | 25.49 | 1.18 | 4.42 |
| | மூலதனம் | 2.15 | 1.62 | 0.53 | 24.65 |
| | **மொத்தம்** | **28.83** | **27.11** | **1.72** | **5.97** |
| **2015** | மீண்டுவருபவை | 28.65 | 28.20 | 0.45 | 1.57 |
| | மூலதனம் | 2.20 | 0.98 | 1.22 | 55.45 |
| | **மொத்தம்** | **30.85** | **29.18** | **1.67** | **5.41** |
| **2016** | மீண்டுவருபவை | 34.90 | 34.35 | 0.55 | 1.58 |
| | மூலதனம் | 2.05 | 1.95 | 0.10 | 4.88 |
| | **மொத்தம்** | **36.95** | **36.30** | **0.65** | **1.76** |
| **2017** | மீண்டுவருபவை | 38.08 | 37.28 | 0.80 | 2.10 |
| | மூலதனம் | 1.30 | 1.16 | 0.14 | 10.77 |
| | **மொத்தம்** | **39.38** | **38.44** | **0.94** | **2.39** |

**மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை**

மீளாய்வாண்டிற்குரிய 02 மூலதன செலவின விடயங்களுக்காகவும் 04 மீண்டெழும் செலவின விடயங்களுக்காகவும் ரூபா 1.66 மில்லியனான மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால், அந்த செலவின விடயங்களுக்குரிய நிதியேற்பாடுகளின் ரூபா 1.32 மில்லியன் கூட்டுத்தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டமையால், சேமிப்பானது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாட்டில் 12 சதவீதம் முதல் 92 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

அலுவலகத்திற்குரிய 01701 ஆம் விடய இலக்கத்தின் கீழான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

**நிலுவைக் கடன் மீதிகளை அறவிட முடியாமை**

| **செலவு** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **உச்ச எல்லை** | **உள்ளபடியானவை** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியானவை** | **உச்ச எல்லை** | **உள்ளபடியானவை** |
| **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| 2.00 | 1.99 | 1.00 | 1.65 | 4.00 | 3.37 |

கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அறவீடுகள் நிலுவையாக இருந்த பணி நீக்கத்திற்குட்படுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரின் இடர் கடன் மீதி ரூபா 128,800 ஆக இருந்ததுடன், அந்த நிலுவைக் கடன் மீதி 03 வருட காலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு அலுவலகம் தவறியிருந்தது.

## 2.4 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை

அலுவலகத்தினால் கீழ் காணப்படும் பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | குழுக்கூட்ட அறிக்கைகள் | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.11.3(அ) வழிகாட்டி |
| (ஆ) | பெறுகைகள் குழுவின் மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுக்களின் வருகைப் பதிவேடு | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.11.2 வழிகாட்டி |

## 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்

2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தி, 2009 யூன் 17 ஆந் திகதிய 09/2009(I) ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2017 ஏப்ரல் 19 ஆந் திகதிய 03/2017 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைய கடமை நேரத்தின் பின்னர் செலுத்தப்படும் படிகளுக்காக காலத்தை அடிப்படையாகக் கொண்டால், அந்த நேரமானது கைவிரலடையாள குறிப்புக்களுக்கமைய சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யாது ரூபா 2,090,753 தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.6 மனிதவள முகாமைத்துவம்

### 2.6.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளவாறான பதவியணியினர் மற்றும் வெற்றிடமான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக பாராளுமன்றத்தினால் ஆளணி வேதன செலவுத் தொகுதி தொடர்பாக ரூபா 28,732,834 செலவிடப்பட்டிருந்தது.

| | ஆளணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 03 | 02 | 01 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 01 | 01 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 10 | 08 | 02 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 16 | 14 | 02 |
| (v) | அமைய / ஒப்பந்தம் / தற்காலிக | 03 | 03 | - |
| | மொத்தம் | 33 | 28 | 05 |